செ.வெ.எண்: 48 நாள்: 20.01.2017

# புதுக்கோட்டை மாவட்டத்தில் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில் புதிதாக கட்டப்பட்ட கட்டிடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் முன்னிலையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த புதிய கட்டிடங்களை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்து பேசியதாவது:

தமிழகஅரசு பொதுசுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறது. இதன்படி தமிழகஅரசு பொதுமக்களுக்கு மிகச்சிறந்த மருத்துவ சேவை வழங்கும் வகையில் பல்வேறு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் புதுக்கோட்டையில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட துணை இயக்குநர் கூட்டரங்கம் மற்றும் சேமிப்புக்கிடங்கு கட்டிடம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், பூதக்குடி ஊராட்சி, இராசநாயக்கன்பட்டியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடம் என மொத்தம் ரூ.1.30 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை துணை இயக்குநர் கூட்டரங்கம் மற்றும் சேமிப்புக்கிடங்கு கட்டிடத்தின் தரைத்தளம் 210 ச.மீ பரப்பளவும், முதல் தளம் 210 ச.மீ பரப்பளவும், இரண்டாம் தளம் 167.46 ச.மீ பரப்பளவும் என மொத்தம் 587.46 ச.மீ பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இதன் தரைத்தளத்தில் வாகனம் நிறுத்துமிடம் மற்றும் சேமிப்புக்கிடங்கும், முதல் தளத்தில் கூட்டரங்கம், இரண்டாம் தளத்தில் ஓய்வறையும் மற்றும் ஆண், பெண் இருபாலருக்கும் தனித்தனி கழிவறை வசதிகளுடன் எழிலுற அமைக்கப்பட்டுள்ளது. இராசநாயக்கன்பட்டியில் கட்டப்பட்டுள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்தகம், மருத்துவ அலுவலர் அறை, ஆய்வுக்கூடம், தொற்றாநோய்கள் பிரிவு, பிறப்பு, இறப்பு பதிவாளர் அலுவலகம், ஊசி போடும் இடம், பிரசவ கால பின் கவனிப்பு பகுதி, பிரசவ அறை, மருந்து கொடுக்குமிடம் உள்ளிட்ட நவீன வசதிகளுடன் எழிலுற கட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் இ.மேட்டுப்பட்டியில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்த ஆரம்ப சுகாதார நிலையம், இனி சொந்த கட்டிடத்தில் செயல்படும்.

மேலும் தமிழகஅரசு கர்ப்பிணி தாய்மார்களின் நலனை பாதுகாக்கும் வகையில் ரூ.12000 மகப்பேறு நிதியுதவித் தொகையும், அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 16 வகை பொருட்கள் அடங்கிய அம்மா குழந்தை நல பரிசுப்பெட்டகமும் வழங்கப்பட்டு வருவதுடன் சமுதாய வளைகாப்பும் நடத்தப்படுகிறது. பெண் கல்வியை ஊக்குவிக்கும் வகையில் தாலிக்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவித்தொகைக்கான காசோலைகளும் வழங்கப்படுகின்றன. எனவே தமிழகஅரசின் இத்தகைய மக்கள் நலத்திட்டங்களை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, இணை இயக்குநர் (பொது சுகாதாரம்) மரு.ஷம்சாத்பேகம், துணை இயக்குநர் (பொது சுகாதாரம்) மரு.பரணீதரன், முன்னாள் மாவட்ட ஊராட்சித்தலைவர் திரு.வி.சி.ராமையா, மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி துணைத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், முன்னாள் ஒன்றியக்குழுத்தலைவர் திரு.சுப்பையா, செயற்பொறியாளர் திரு.பழனிச்சாமி (கட்டிடம் மற்றும் மருத்துவப்பணிகள்), உதவி செயற்பொறியாளர் திரு.மணிவண்ணன், கூட்டுறவு சங்கத்தலைவர்கள், முன்னாள் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை**